விலை முக்காலணா

மாலைமணி

(திராவிடர் தமிழ்த் தினசரி கருத்திதழ்) ஆசிரியர்: மு. கருணாநிதி

MALAI MANI Tamil Daily

மலர் 3 | சென்னை 3—11—51 சனிக்கிழமை ✱ வெளியூர்: 4—11—51 ஞாயிற்றுக்கிழமை | மணி 85

பஜனையும், பாராயணமும் பசியைதீர்க்காது

மதத்தின் பேரால் மக்களை ஏமாற்றிய காலம் வேறு

சங்கராச்சாரிகளின் சாணக்கியம்

"நாட்டில் நாஸ்திகம் பரவியதால்தான் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டுள்ளது."

"ஆஸ்திகம் பரவினால்தான் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் நீங்கும்."

"வீதிகள் தோரும் பரமனின் பஜனை நடைபெற்றால் பஞ்சம் ஒழியும்."

என்று ஸ்ரீலஸ்ரீ சாட்சாத் சங்கராச்சாரியார் அவர்கள் திருப்புகலூர் தேவஸ்தானத்தில் நூல் நிலையம் ஒன்று திறந்து வைக்கும்போது குறிப்பிட்டுள்ளார்.

சங்கராச்சாரியார் நூல் நிலைய திறப்பு விழாவில் நூல் நிலையத்தால் ஏற்படும் நன்மை தீமைகளைப் பற்றி பேசியிருந்தால் அந்த பேச்சு மக்களின் அறிவளர்ச்சிக்கான தென்று கூறியிருப்போம். மக்களும் அவரது பேச்சுப்படி நடப்பதில் நமக்கொன்றும் மாறுபாடான கருத்தும் இருந்திருக்காது

ஆனால், சனாதனத்தின் தலைசிறந்த முதல்வராக விளங்கும் சங்கராச்சாரியார் பஞ்சத்திற்கும்—பகவானுக்கும் முடிபோட்டு நாடெங்கும் பகவத்கீதை பிரசங்கங்கள் நடைபெற வேண்டுமென்றும், தின தோறும் வீதிகளில் பெரிய புராணம், பாராயணமு பஜனை ஊர்வலங்களும் நடை பெற்றால் பஞ்சம் தீரும் எ றும் வாய்க்கூச்சாமல் கூ யுள்ளார்.

பாராயணமும் பஜனை மக்கள் பசியைத் தீர்க்குமெ ரால் உழுது பயிரிட்டு வேண்டிய நிலை மக்களு ஏற்பட்டிருக்க வேண்டியப யில்லை.

பகுத்தறிவு உச்சநிலை அடைந்துள்ள இந்த ஞான காலத்தில்கூட மக்க எதையும் நம்புவார்கள் என் சங்கராச்சாரியார் நினைப்ப மடமை யென்றே கூறுவோ

தமிழ் நாட்டைப் பொறுத வரையில் மக்கள் மதத்தின் பேராலும் கடவுளின் பெயரா லும் ஏமாற்றிய காலம் ம ஏறிவிட்ட தென்பதை ஆ சாரியார் அறியார் போலும்.

தமிழர்கள் கட்டிய கோவி கள் எல்லாவற்றை, அ கோவிலுக்காக ஏற்படுத்தி மான்யங்கள் பல கோடி. இ வளவும்—மக்களின் அறி வளர்ச்சிக்கோ, கல்வி அபி விருத்திக்கோ உபயோகப்பட் டிருக்கிறதாவென்றால், மாறாக மடமையை வளர்க்க மக்களை மாக்களாக்கிவிட்ட தென்றே கூறலாம். இனியும் மக்களை பண்டைய கட்டை வண்டி காலத்திற்கு சங்கராச்சாரியார் இழுத்துங் செல்வதை யாரால் தான் கேட்டும் — பார்த்தும் சகித்துக் கொண்டிருக்க முடியும். ஆகவே, சங்கராச்சாரியார் இவ்வித பேச்சுக்களை த கள் சீடர்களிடம் பேசுவதோ வைத்துத்துக் கொள்வதுநலம்.

N. S. கிருஷ்ணனுக்கு கம்யூனிஸ்டு மற்ற கழகங்கள் ஆதரவு

சென்னை, நவ 2—

சென்னை மாகாணத்திலுள்ள சுமார் 14 அரசியல் கட்சிகள் இம்மாதக் கடைசியிலிருந்து 260 லட்சம் வோட்டர்களின் ஆதரவைப்பெற வெகு ம்முரமாக வேலை செய்யத் துவங்கி டும்.

அபேட்சை மத்திரம் சமர்ப்பிக்கும் கடைசி தினமான நவம்பர் 21ந்தேதி யன்று பிரசாரம் தலையெடுக்க ஆரம்பிக்கும் சென்னை ராஜ்யத்தில் ஜனவரி 2-ந் தேதி தேர்தல் ஆரம்பமாகி சுமார் மூன்று வாரம் நடைபெறும் வோட் டுக் கணக்கெடுப்பு பிப்ரவரி 11ந் தேதிக்குள் முடிவு பெறும்

சென்னை சர்க்காரிலுள்ள மொத்தம் 11 மந்திரிகளுள் முதன் மந்திரி உள்பட 9 பேர் தேர்தலுக்கு நிற்பார்கள் மந்திரிகளை எதிர்க்கப் போட்டி கட்சிகள் செல்வாக்குள்ள நபர்களை நிறுத்துவார்கள். தோழர் காமராஜ் நாடாரும் தேர்தலுக்கு நிற்கிறார். ஆனால் அவர் பார்லிமெண்டு தேர்தலுக்கு நிற்பாரா அல்லது அசெம்பிளி தேர்தலுக்கு நிற்பாரா வென்பது தெரியவில்லை.

நகரில் 7 பொது ஸ்தானங்களும் ஒரு ஹரிஜன ஸ்தானமும் இருக்கின்றன ஹரிஜன ஸ்தானத்தில் தோழர் சிவஷண்முகம் பிள்ளை போட்டியிடுவார் பிரஜா கட்சி இவருக்கு எதிராக ஒருவரை நிறுத்தும்.

நகரிலுள்ள ஒரேஒரு பார்லிமெண்டு ஸ்தானத்துக்கும் தீவிர போட்டி இருக்கும் தோழர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் காங்கிரஸ் சார்பில் நிற்கலாம் சோஷலிஸ்டு கட்சி சார்பில் தொழிலாளர் தலைவர் தோழர் டி எஸ் ராமானுஜமும் கம்யூனிஸ்டு பிரஜா கட்சி ஜஸ்டிஸ்கட்சியும் போட்டியிடும் சினிமாநடிகர் தோழர் என். எஸ். கிருஷ்ணன் ஒரு தொகுதி தேர்தலில் நிற்கப் போகிறார் அவரை கம்யூனிஸ்டு மற்றும் பல கழகக்கள் ஆதரிக்கும்.

சென்னை பாங்கிகள்

சென்னை, நவ. 2—

சென்னையில் உள்ள "க்ளியரிங்" பாங்கிகளின் அலுவல் நேரம் 1950 செப்டம்பர் 26-ந் தேதிக்கு முன்னால் இருந்த வேலை நேர விகிதத்துக்கு மாற்றி அமைக்கப்படும் என்று சென்னை பாங்கிகள் 'க்ளியரிங் ஹவுஸ் தலைவர் இன்று அறிவித்தார்.

திருத்தியமைக்கப் பட்ட நேரத்தின் படி திங்கட்கிழமையிலிருந்து வெள்ளி கிழமை வரை காலை 10 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரையிலும் சனிக்கிழமை யன்று காலை 10 மணியிலிருந்து மத்தியானம் 12 மணிவரையிலும் இந்த பாங்கிகள் வேலைச் செய்யும்.

தி. மு. க. பொதுக் குழு

கூட்ட அழைப்பு

அன்புடையீர்,

வணக்கம்,

மதுரையில் நவம்பர் 17, 18 சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும் பொதுக் குழுக் கூட்டம் நடைபெறும்.

கவனிக்கப்படும் பொருள்கள் :

கழக சட்டதிட்டம்

மாநில மாநாடு

பொதுத் தேர்தல்

பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகை தருமாறு வேண்டுகிறேன்.

அன்பன்,

அண்ணாதுரை.

கவர்னரின் காரியதரிசி

சென்னை, நவ. 3—

சென்னை கவர்னரின் காரியதரிசியாக உள்ள பி. கோவிந்தன் நாயர் இந்த மாத முடிவில் சர்க்கார் காரியாலய வேலைக்குத் திரும்புவார் அவர் பொது இலாகாவில் டெப்டி காரியதரிசியாக வேலை பார்ப்பவர்.

இப்பொழுது சர்க்கார் காரியாலத்தில் இருந்துவரும் சாம்பமூர்த்தி கவர்னரின் காரியதரிசியாக நியமிக்கப்படுவார்.

மாலை மணி

சென்னை 3—11—51 சனிக்கிழமை

உடன்பிறந்த புத்தி போகுமா?

காங்கிரஸ்காரர்கள் ஒரு நாளேனும் நேர்மையைக் கையாண்டு தேர்தலில் வெற்றி பெற்றதில்லை என்பது, தேர் ல் விவகாரங்களைப் பாரபட்ச ற்ற முறையில் கவனித் ரிந்தவர்கள் அனைவரும் ிவர். கடந்த தேர்தல் ில் காங்கிரஸ்காரர்கள் ிய அளவுகடந்த பொய் ளையும், பிற தந்திரங்களையும் ா து மக்களும் நன்கு ிந்து கொண்டு விட்டனர். தர்தலில் நிற்கும் பிற கட் காரர்கள் மீது அபாண்டப் ுகளையும் பழி மொழிகளை பொய் நிந்தைகளையும் த்தித் திரிந்து, வாக்காளர் ிடம் பல ஆசை வார்த்தை க் கூறி, தேர்தல் விதிகளை ல்லாம் மீறி, எல்லா வகை ன கயவாளித்தனங்களை கையாண்டே வெற்றி ற்று வந்துவிட்டார்கள் ன்பதைப் பொது மக்கள் னகறிந்திருக்கின்றனர். இவ் று கயவாளித்தனத்தி லயே காலங் கழிப்பது காங் சின் உடன் பிறந்த குண கையால், காங்கிரஸ கட்சித் ர்தல்கள், காங்கிரஸ் கட் தலைவர்கள் தேர்தல் தலியவற்றில் கூடக் ங்கிரசுக்காரர்கள் நேர் மையை மறந்து கயவாளித் னத்தையே கையாண்டனர் ன்பது அவர்களாலேயே ன்கு வெளிப்படுத்தப்பட் டது.

தமிழ் நாடு காங்கிரஸ கமிட் த் தலைவர் தேர்தலின் போதும், பின்னர் தமிழ் நாடு ங்கிரஸ கமிட்டி நடத்திய பொருட்காட்சி பற்றியும், காங் கிரஸ மந்திரிகள் நடவடிக்கை பற்றியும் இளம்பிய ஊழல் ார்கள் அளவிட்டுக் கூற முடியாதவை. இவற்றை வெளியிட்டவர்கள் காங்கிரஸ காரர்களே என்றால் ஊழல் சகிக்க முடியாத அள வுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகிறதல்லவா?

இதே போல, அகில இந்திய ங்கிரஸ கமிட்டித் தலைவர் தர்தல் வெறும் ஊழலைத் தவிர நேர்மைக்குச் சிறிதும் இடமில்லாமல் நடைபெற்ற தென்பதை ஆச்சார்யா கிருப ளானி நன்கு விளக்கிவிட்டார். தே போன்று அ. இ. கா. மிட்டியின் நிர்வாகமும் ல் மயமானதே என்பதை பண்டித நேரு பிடிவாதமாயிருந்து அக்கமிட்டியை மாற்றியமைத்ததிலிருந்தே பொது மக்கள் நன்கு அறிந்துகொண்டிருக்கின்றனர். ஆனால் இந்த ஊழல்களைக் காங்கிரஸகாரர்கள் நடத்துவதென்னவோ, ஜனநாயக முறை பிசகாமல் நடத்துவதைப் போலத்தான் நடிப்பார்கள். எனவே, காங்கிரஸகாரர்கள் நடித்து மக்களை மயக்கி, ஊழல் மயமாக எதனையும் நடத்தித் தங்கள் சுயநலங்களையே பெருக்கிக் கொண்டிருப்பவர்கள் என்பது இவர்களுடைய ஆட்சிமுறையிலிருந்து மக்கள் நன்கு அறிந்து கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் மக்கள் தங்கள் ஊழல்களை நன்கு அறிந்து கொண்டுவிட்டனர் என்பதைக் காங்கிரஸகாரர்கள் அறிந்து கொண்டு விட்டனராகையால், இந்தத் தேர்தலில் கயவாளித்தனங்களில் தேர்தலுக்கு முன்னதாகவே இறங்கி விட்டனர்.

ஊரார் மெச்சிக்கொள்ளும் வகையில், நேரு வாய்வீரமாகப் பேசினார். இந்தத் தேர்தலில் நேர்மைக்கும் திறமைக்குமே முதலிடம் தரப்படுமென்று. ஆனால் வெளிவந்துள்ள அபேட்சகர் பட்டியலைப் பாருங்கள்! நேருவின் வார்த்தை உண்மையானதென்பது புலனாகிவிடும்! அது மட்டுமல்ல. அனுபவமும் நேர்மையும் மிக்கவர்கள் வெளிக்கட்சியினராயிந்தாலும் அவர்களுக்குக் காங்கிரஸ போட்டியிடாது என்றும் நேரு கூறினார். ஆனால் எந்தக் கட்சியிலும் சேராத திறமை சாலிகள் தேர்தலில் நின்றால், நேர்மை திறமை ஆகியவற்றினால் அவர்கள் வெற்றி பெற்று விடுவது உண்மை எனக் கண்ட காங்கிரஸகாரர்கள், தேர்தலுக்கு முன்னரே தகிடுதத்தம் செய்யத் தொடங்கிவிட்டனர்.

டாக்டர் ஜான் மத்தாய் மத்திய சட்டசபைக்குக் கோட்டயம் தொகுதியில் போட்டியிட விரும்பி பிராமினேஷன் பத்திரம் தாக்கல் செய்தார். இவரை எதிர்த்து ஒரு காங்கிரஸ அபேட்சகர் பிராமினேஷன் பத்திரம் தாக்கல் செய்தார். இவற்றைப் பரிசீலனை செய்த தேர்தல் அதிகாரி டாக்டர் ஜான் மத்தாயின் அபேட்சைப் பத்திரம் செல்லாதென ஆட்சேபங் கிளப்பினார். டாக்டர் மத்தாய் தேர்தல் அதிகாரியின் தீர்ப்பை எதிர்த்து, திருவாங்கூர்–கொச்சிஉயர்நிதிமன்றத்தில் மனுச் செய்துகொண்டதன் மீது, டாக்டர் மத்தாயின் நியமனப் பத்திரத்தைத் தேர்தல் அதிகாரி நிராகரித்து தீர்ப்பளித்ததைச் செயல் முறையில் கொணரக் கூடாதென்று தேர்தல் அதிகாரிக்கு உயர்நீதி மன்றம் உத்தரவிட்டது.

இவ்வாறே மத்திய சட்டசபைக்குக் கோட்டயம் தொகுதியில் நின்ற மற்றொருவரை, அவர் ஆகஸ்ட் மாதம் ஏதோ ஆட்சேபனைமான பிரசங்கம் செய்ததாகப் போலீசார் கைது செய்திருக்கின்றனர். எனவே, காங்கிரசுக்கு எதிராக நின்ற இரண்டு பேருள் ஒருவரான டாக்டரின் நியமன பத்திரத்தை நிராகரித்தும், மற்றொருவர் மீது வழக்குத் தொடர்ந்தும் இருவரையும் ஒழித்து விட்டால், காங்கிரஸ அபேட்சகர் எதிர்ப்பின்றி வெற்றி பெறலாம் என்பது தான் காங்கிரஸகாரர்களின் எண்ணமாகும். இந்த எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளவே இத்தகைய இழி செயல்களில் காங்கிகிஸகாரர்கள் இறங்கியிருக்கிறார்கள். காங்கிரஸகாரர்கள் இத்தகைய இழி செயல்களைத்தவிர, வேறு வழிகளில் வெற்றிபெற முடியாதென்பது திண்ணம். எனவே, பொதுமக்கள் இத்தகைய கயவாளித்தனக் காங்கிரஸகாரர்களை எங்கும் வெற்றி பெறச் செய்யாதிருத்தலே நாட்டை முன்னேற்றுவிக்கும் நல்ல வழியாகும் என்பதை உணர்வார்களாக.

ஏஜண்டு தோர்களுக்கு

அக்டோபர் மாதப்பட்டியல் நமது "மாலைமணி" ஏஜண்டு தோழர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது 7-11.51 க்குள் பட்டியல் பாக்கியை அனுப்பிவைக்காத தோழர்களின் ஏஜன்ஸியைரத்து செய்வதோடு பாக்கி தொகையை வசூல் செய்யதக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நிர்வாகி
"மாலைமணி",

அறிவிப்பு

"மாலை மணி" அன்றாடம் ரெயில் பார்சல்களும் தபால் பார்சல்களும் சரிவரபரிசீலனை செய்து அனுப்பப்பட்டு வருகிறது

ரெயில்—தபால் மூலம் ஏற்படும் தவறுதல்களுக்கு நிர்வா கப் பொறுப்பேற்று கொள்ள முடியாமைக்கு வருந்துகிறோம்

சரிவர குறித்த காலத்தில் கிடைக்காத ஏஜெண்டுகளும் சந்தாதார்களும் சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளுக்குப் புகார் செய்வது நலம். நாமும் இது சம்பந்தமான புகார்களை ரெயில்வே அதிகாரிகளுக்கும் தபால் இலாக்காவுக்கும் அனுப்பியுள்ளோம்.

நிர்வாகி
"மாலைமணி"

கள்ளச்சந்தையினருடன் காங்கிரஸ் கூட்டுறவு

தேர்தல் நிதிக்கு 5 லட்சம் ரூபாய் வாங்கச்சதி

காங்கிரசுக்காரர்களின் மானங்கெட்ட நடவடிக்கை

இந்தூர், நவ 2—

மத்ய பாரத் போலீசார் பிரபல துணி வியாபாரி பாலமுகுந்த பிரோபிரஸாத் கடையை சோதனை போட்டு பல முக்கியமான தஸ்தாவேஜுகளை கைப்பற்றினர் இந்தூரிலும் இதர வியாபார ஸ்தலங்களிலும் கள்ள மார்கெட்டில் ஏராளமான துணி விற்கப்படுகிறது என்று அந்த தஸ்தாவேஜுகளிலிருந்து தெரிவந்ததாம் கள்ள மார்க்கெட் துணி விற்பனை மூலம் பல வியாபாரிகள் கோடிக் கணக்கான ரூபாய் லாபம் சம்பாதித்துள்ளனர். ஆனால் இதுவரை ஒரு வியாபாரியும் கைது செய்யப்படவில்லை.

மத்யபாரத் மில் முதலாளிகள் சிலரும், துணி வியாபாரிகளும் சர்க்காருடன் தொடர்புடைய காங்கிரஸ் பிரமுகர் ஒருவருக்கு 5 லட்சம் ரூபாய் கொடுக்க முன் வந்துள்ளதாகத் தெரிகிறது காங்கிரஸ் தேர்தல் நிதியில் அத்தொகை சேர்க்கப்படுமாம்,

அத்தொகையில் முதல் தவணையாக சென்ற ஆகஸ்டு மாதத்தில் 25,000 ரூபாய் தேர்தல் நிதியில் செலுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது காங்கிரஸ் கமிட்டி அத்தொகையைக்கொண்டு ஒரு ஜீப்கார் வாங்கியுள்ளது.

இனி நடப்பவை

சென்னை:—4-11—51 இரவு 8-மணிக்கு மேல் திருவல்லிக்கேணி சூரியப்பமுதலி தெருவில் தோழர் இசைமுரசு இ. எம். ஹனிபா அவர்களின் இன்னிசை கச்சேரி நடைபெறும் தோழர்கள் அனைவரும் வருக.

சென்னை: — 4—11—51 ஞாயிறு காலை 10-மணிக்கு கழக இல்லத்தில் (13-வது வட்டம் 43, மண்ணடி வீதி) சொற்பயிற்சி நடைபெறும் தலைவர் 'போர்வாள் ஆசிரியர்' தோழர் காஞ்சி மணிமொழியார் அவர்கள் நாஞ்சில் சேலியர், எஸ். வி அன்பில் அபூக்கர். தம்பி, துரை மற்றும் பலர் பேசுவார்கள் பேச ஆர்வமுள்ள தோழர்கள் வகுப்பில் கலந்து கொள்ளலாம் என்பதை தெரிவித்து கொள்கிறோம்.

நடிகைகளின் வருமான வரி அகதிமென எதிர்ப்பு

ஸ்டாக்ஹோம், நவ. 2—

ஸ்விடனில் வருமான வரி விகிதங்கள் சக்திக்கு மீறி மிக அதிகமாக இருக்கிறதென்றும் வரி பாக்கியைக் கட்டுவதைவிட "இன்ஸால் வென்ட்" கொடுத்துவிட தயார் என்றும் 7 ஸ்வீடிஷ் நடிகைகள் வரி கொடா இயக்கத்தை ஆரம்பித்திருக்கின்றனர்.

இவர்கள் 335 பவுன் முதல் 2400 பவுன் வரை வருமான வரி பாக்கி கொடுக்க வேண்டியிருக்கிறது.

மூன்று வருஷங்களுக்கு முன் ஒரு பிரபல பாடகர் தன் பாட்டு மூலம் சந்தோசத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்துகிறார் என்பதற்காக அவர் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டார் என்றும் தாங்களும் அம்மாதிரியே சேவை செய்வதால் ஏன் தங்களுக்கும் வரி விலக்கு அளிக்கலாகாது என்றும் இவர்கள் கேட்கிறார்கள்.

ஸ்டுரே லேகர் வால் என்ற நடிகை ஸாமர்ஸெட் மாகமின் ஹோம் அண்ட் பியூட்டியில் நடித்து வருகிறார் இவர் தன் கார்கூட கடனாக பெற்று உபயோகிப்பதாகக் கூறுகிறார்.

சிவப்புத்துணியைக் கண்டால் காளைப் பயப்படுமா?

லண்டன், நவ. 2—

சிவப்பு துணியைக்கண்டாலே காளைமாடு பயப்பட்டு மிரளும் என்றுசொல்வது தவறு என்றும் காளை மாடுகளுக்கு எல்லாக் கலருமே ஒன்று தான் என்றும் பிரிட்டிஷ் கண் வைத்திய சஞ்சிகையில் கூறப்பட்டிருந்தது விவசாயிகளால் ஒப்புக்கொள்ளப்படவில்லை.

ஜீவஹிம்ஸை தடுப்புக்கான ராயல் சொஸைட்டியின் பிரதம கால் நடை சாதன் மேஜர் ஹன்காக் இதுபற்றி கூறுகையில் விவசாயிகள் இதை ஒப்புக் கொள்ளத்தான் மாட்டார்கள் என்றார் விவசாயியாகட்டும் அல்லது கால் நடை வைத்யராகட்டும் ஒரு சிவப்பு ஷர்ட்டையோ அல்லது ஒரு சிவப்பு 'டை'யையோ கட்டிக்கொண்டு காளை முன் செல்லவே மாட்டான் என்று அவர் தெரிவித்தார்.

ஸோல்ஜர்கள் பறக்கிறார்கள்

வாஷிங்டன், நவ. 2—

ஸோல்ஜர்கள் பறப்பதற்காக அவர்களின் முதுகில் ஹெலிகோப்டர்கள் பிணைக்கப்பட்டு, இப்பொழுது காலிபோர்னியாவில் யு. எஸ். கப்பற்படையைச் சேர்ந்தவர்கள் பரிசோதனை செய்து வருகின்றனர்.

இந்த ஹெலிகோப்டரின் நிறை 98 பவுண்டுகள். இதில் சைகிளிலுள்ள ஸீட்டு போலுள்ள இடத்தில் ஸோல்ஜர் அமருவாராம். பறப்பதற்கு இதில் ஒரு சிறிய இயந்திரமும் பொருத்தப்பட்டிருக்கிறதாம்.

திருவாங்கூரில் பெண் அபேட்சகர் கைது

ஆலப்புழை, நவ. 2—

திருவாங்கூர் சட்ட சபைக்கு சுயேச்சை அபேட்சகராக போட்டியிடவிருந்த தோழியர் கே. ஆர். கவுரி கைது செய்யப்பட்டார்.

அபேட்சர் பத்திர பரிசிலனையின் போது தேர்தல் அதிகாரிமுன் பிரசன்னமாயிருக்கையில்தோழியர் கவுரி கைது செய்யப்பட்டார்.

ஆலப்புழை டிவிஷனல் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தொடரப்பட்டிருக்கும் ஒரு கம்யூனிஸ்டு வழக்கு சம்பந்தமாக அவர் போலீசாரால் தேடப்பட்டு வந்தார். இப்பொழுது அவர் ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிறார்.

மாணவர்களின் கிராமம்

---

300 விடுதிகள் தயார்

ஆஸ்லோ, நவ 1—

நார்வேயின் தலைநகரமான ஆஸ்லோவிற்கு அருகாமையிலே மாணவர்களுக்கென்று ஒரு கிராமம் ஏற்படுத்தப்படுகிறது. மாணவர்கள் தங்குவதற்கென்று 3000 விடுதிகள் தயார் செய்யப்பட்டுள்ளது. இவர்கள் தங்கள் உணவை சமைத்துக் கொள்வதற்கு தனி அறைகளும் இந்த விடுதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு மாசத்திற்கு வாடகை மூன்று பவுன்.

இந்த விடுதிகள் கட்டுவதற்கு வேண்டிய செலவை நார்வேயின் ஸ்டேட் ஸ்தாபனம் ஏற்றுக் கொண்டிருக்கிறது

சென்ற உலக யுத்தம் முடிந்த பிறகு மாணவர்களின் பாங்கி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அது 7,000 மாணவர்களுக்கு 1,153,000 பவுன் கடன் அளித்திருக்கிறது சென்ற ஆண்டு மாணவர்களுக்கு 12 300 பவுன் கடன் அளித்தபோதிலும், இவர்கள் 20 000 பவுன் திருப்பி கொடுத்துவிட்டனர்களாம்.

மனைவிக்கு அடங்கி நடக்கும் கணவர்கள் சங்கம்

லண்டன், நவ. 1—

யார்க்ஷயரில் போல்டர் கிளக் என்கிற மனைவிக்கு அடங்கி நடக்கும் கணவர்கள் சங்கம் ஒன்று சுமார் 60வருஷ காலமாக நடைபெற்று வருகிறது

குடும்ப வாழ்க்கையிலிருந்து வருஷத்தில் ஒரு நாள் 'விடுதலை' பெற இச்சங்கத்தினர் எங்கேயாவது தூர இடத்திற்கு எக்ஸ்கர்ஷன் செல்ல ஏற்பாடு செய்வது வழக்கம் இதைக் கூட இவர்கள் பெண்டாட்டிகளுக்குத் தெரியாமல் இரகசியமாகச் செய்வர்.

ஈவா பேரானுக்கு புற்று நோய்?

போனஸ் அயர்ஸ், நவ 1—

ஆர்ஜெண்டினாவின் பிரஸிடெண்டு பேரானின் மனைவி ஈவா பேரானுக்கு புற்று நோய் ஏற்பட்டிருப்பதாக வதந்திகள் பரவி வருகின்றன. பிரபல அமெரிக்க ரேடியோ லாஜிஸ்டும், லத்தீன் அமெரிக்க புற்று நோய் நிபுணருமான ஆர்ஜெண்டினா சென்றிருப்பது காரணமாகவே இந்த வதந்திகள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

வட கிரீன்லாந்தில் நிர்மானுஷ்ய பிரதேசங்கள்

லண்டன், நவ 1—

வட கிழக்கு கிரீன்லாந்தில் மலைக்கு அப்பால் பனிபடர்ந்த நிர்மானுஷ்யமான இடங்களில் சென்று சுற்றிப் பார்த்து விட்டுவர விஞ்ஞானிகள், டெக்னிஷியன்கள் கடற்படை அதிகாரிகள் கொண்ட கோஷ்டி வருகிற ஜூலை மாதம் கிளம்பவிருக்கிறது. பனிக்கட்டிகளை உடைத்துச் செல்லக் கூடிய விசேஷ கப்பல் ஒன்று இக்கோஷ்டியால் உபயோகிக்கப்படும்.

ஓர்லாண்டோ இரயில்வேயில் மாண்டவர்கள் தினம்

ஜோஹென்னஸ்பர்க் நவ 2

ஓர்லாண்டோ என்ற இடத்தில் 1949 ல் நடைபெற்ற ரயில் விபத்தில் மாண்ட 50 பேர் இந்தியர் சுதேசிகள் ஞாபகார்த்தமாக ஒரு கூட்டம் அந்த ஸ்தலத்தில் நடைபெற்றது.

ஆசிரியருக்கு முடங்கல்

கலையின் பேரில் கொலை

ஐயா,

தற்போது ஆட்சியாளரால் காட்டப்பட்டுவரும் செய்திப்படங்களில் 'பொம்மலாட்டம்" என்பதும் ஒன்றாகும். இப்படத்தில் முதலாவதாக அரிச்சந்திரன் கதையைக் காட்டுகிறபோது, "ஆரியா வர்த்தத்தின்" சக்கிரவர்த்தி என அரிச்சந்திரனைக் குறிப்பிடுகிறார்கள். ஆரியா வர்த்தத்தைப் பிரச்சாரம் செய்வதை மறந்துவிடாத ஆட்சி, "திராவிட" என்னும் சொல்லை ஏன் வெறுக்கிறார்கள்? அன்று "பைத்தியக்காரன்?" திரைப்படத்தில் திராவிடத் தளபதி" என்னும் சொற்களை வெட்டிவில்லையா? அப்படியானால்இந்த அரசாங்கத்தின் நோக்கம் ஆரியத்தை வளர்ப்பதுதானே! ஆரியா வர்த்தத்தை புகழும் ஆட்சி, திராவிடமென்றும் சொல்லையே வெறுப்பது ஏன்?

அன்று இப்படித்தான் சென்னை மாநில ரூல்லூகா பட்டர் வாலாற்று ஏடுகளிலே திராவிடமென்ற சொல் இடம் பெறக்கூடாதென வரலாறு எழுதுபவர்கட்கு ஆணையிட்டார் மாணவர்கள் திராவிடத்தை மறந்தாபோய் விட்டார்கள்?

இன்னும் இதே நிலைதான், அவர்கள் ஆரியம் என்று வேண்டுமானால் தனியாக ஒரு செய்திப் படம் எடுத்து திராவிடத்திலே பரப்பட்டும். வரவேற்கிறோம். நேருக்கு நேர் போருக்குவரும் ஆட்சியைப் பார்த்துக்கொள்வோம்

அரிச்சந்திரன் கதை இப்படியிருக்க இந்துக்களின் இராமாயணமென்னும் நாட்டிற்கு தெளிவு பெரும் ஓர் கதை" யைப் பொம்பலாட்டம் வாயிலாக இந்துக்களும் இந்துக்களல்லாரும் வாழும் நாட்டிலே, இந்துக்களும் இந்துக்களல்லாரும் பணம் கொடுத்து பார்க்கும் திரைப்படங்களினுடன் பரப்பும் "மதச்சார்பற்ற சர்க்காரின் திறமையே திறமை!" என்ன செய்தாலும் எதைச் சொன்னாலும் கேட்டுக் கொண்டிருக்கும் இளிச்சவழயர்கள் வாழும் இந்த நாட்டிலே, அரிச்சந்திரன் கதையையும், இராமாயணத்தையும் இராவணனைக் கொடும்பாவி கட்டி இழுக்கும்காட்சியையும் மட்டுமா காட்டுவார்கள். மறுபடியும் புராண காலத்தையே திருப்பியே கொண்டு வந்துவிடுவார்கள். திராவிடர்களாகிய வேசி மக்களாகிய தாஸ்யூக்கல் என்று கூட இனி நேரடியாகக் கூறுவார்கள் அந்நிலை ஏற்பட இப்"பொம்மலாட்டம் ஒரு ஒத்திகை அல்லது பரீட்சைதானே பரீட்சையில் ஆரியமே வென்றது. படம்பார்க்கும் அனைவரும்மானத்தை விட்டு விட்டு சும்மாதானே இருக்கிறார்கள் சோற்றாலடித்த பிண்டங்களாக!

சோற்றாலடித்த பிண்டங்களாம் திராவிடர்களே! நீங்கள் இளிச்சவாய்த் தினத்திற்கு நமது பாராட்டு!

விருதுநகர் 30-10-51 — அன்பன் பு. இராசதுரை,

ஜார்டன் சர்க்காரில் பெண்களுக்கு வேலை

மந்திரி சபை முடிவு

அம்மான், நவ. 2—

ஜார்டன் சர்க்காரில் அவசியம் ஏற்பட்டபோது பெண்களுக்கு வேலை தருவது, என்று ஜார்டன் மந்திரி சபை முடிவு செய்திருக்கிறது.

பெட்ரோல் கொண்டு செல்ல தடை

கெய்ரோ, நவ 2—

சூயஸ் கால்வாய் பிரதேசத்திலிருந்து கெய்ரோவுக்கு ரோடு மார்க்கமாக பெட்ரோல் கொண்டு செல்வதற்கு பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகள் மீண்டும் தடைவிதிக்கிறார்கள் இந்த தடை உத்தரவு நேற்றிலிருந்து அமுலுக்கு வந்துள்ளது.

இன மண்டல சட்டத்தை மீறியதாக

---

3 இந்தியர் உள்பட 8 பேர்களுக்கு தண்டனை

டர்பன், நவ. 2—

இன மண்டல சட்டத்தை மீறியதற்காக 3 இந்தியர்கள் 3 சுதேசிகள் இரு ஐரோப்பியர்கள் மாஜிஸ்திரேட்டினால் குற்றம் செய்தவர்கள் எனக்கருதப்பட்டு தண்டிக்கப்பட்டனர்,

ஆனால் இரு ஐரோப்பியர்களுக்கு விதித்த தண்டனையை மட்டும் நவம்பர் முடிவு வரை நிறுத்தி வைத்து அதற்குள் அவர்கள் தாங்கள் விடுதிகளை காலி செய்து விடவேண்டும் என்று மாஜிஸ்திரேட் உத்தரவு பிறப்பித்தார்.

வருந்துகிறோம்

சென்னை அக், 22—

பாகிஸ்த்தான் பிரதம மந்திரியும் பாகிஸ்தான் அடைய மிக அரும் பாடு பட்டவருமான அறிஞர் செயல் வீரர் லியகத் அலிகான், படுகொலை செய்யப் பட்டதை கண்டு மிக மிக வருத்த அடைகிறோம் மீளா துயரத்தில் ஆழ்ந்துள்ள பாக்கிஸ்தான் மக்களுக்கும் அவரது மனைவி மக்களுக்கும் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தை இம் மன்றத்தின் சார்பில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். என சைதாப்பேட்டை முத்தமிழ் மன்றத்தின் சார்பில் அறிவிக்கப்படுகிறது.

மீ. சு. இளமுருகு

சுற்றுப் பிரயாணம்

தி. மு. கழகப் பிரச்சாரம்

நவ.	3	அன்னஞ்சி
,,	4	தூத்துக்குடி
,,	11	சின்னமனூர்

இந்தோனேஷியாவி[illegible] முயற்சி

வாஷிங்டன் நவ 2

யுனைடெட்ஸ்டேட்ஸ் தகர கமிஷ[illegible] இவ்வாரம் கிழக்கோடிக்கு விஜயம் செய்கிறது என்றும் இக்கோஷ்டி இந்தோனேஷியா சென்று அங்கிருந்து தகர சப்ளைகளைப் பெற முயலும் என்றும் தெரியவருகிறது இக்கோஷ்டி மலேயாவுக்கும் செல்லும்.

பிரிட்டிஷ் "பேடண்ட்டுகள்"

லண்டன், நவ. 2—

ஜெட் என்ஜின்களில் பிரிட்டிஷ் "பேடண்ட்டுகளை" யுத்த சமயத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸ் உபயோகிக்கலாம் என அனுமதிக்கப்பட்டிருந்தது. யுத்தம் முடிந்தபின் அவை தொடர்ந்து உபயோகிக்கப்படுவதற்கு ஒரு தொகை பிரிட்டிஷ் சர்க்காருக்கு கொடுக்கப்படும். 200 பிரிட்டிஷ் பேடண்ட்டுகளை சுமார் 20 வருஷ காலத்திற்கு உபயோகிக்க 1142900 பவுன்களை யு. எஸ். பிரிட்டனுக்கு தரும்.

பிரிட்டிஷ் டாக்டரின் எச்சரிக்கை

லண்டன், நவ. 2—

சாதாரண முறையில் சிகரெட் புகையை உள்ளே இழுத்துக் கொண்டால் ஒருவரை அவ்வளவாகப் பாதிக்கப்படுவதில்லை ஆனால் 20 விநாடிக்கு ஒரு முறை புகையை இழுப்பதால் தான் இரத்த ஓட்டம் பாதிக்கப்படுகிறதென்று பெல்பாஸ்டு, க்வீன்ஸ் சர்வகலாசாலை மனோதத்துவ பேராசிரியர் டாக்டர் ஜெ. டி. ஷெப்பேர்ட் எச்சரிக்கை யிட்டுள்ளார் இதற்குக் காரணம் புகையிலை என்று அவர் மேலும் எச்சரிக்கையிட்டுள்ளார்.

குழந்தைகளை கவனித்துக்கொள்ளும் வேலை

இதற்கும் இயந்திர சாதனப்போட்டி வந்து விட்டது

நியூயார்க், நவ. 2—

யுனைடெட்ஸ்டேட்ஸில் குழந்தைகளைக் கவனிக்குக்கொள்ளும் தொழில் ஒரு பெரிய தொழிலாக நடத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் வருஷத்தில் 761600000 டாலர் சம்பாதிக்கப்படுகிறதாம். இத்தொழிலிலுள்ளவர்கள் தங்களுக்கென்றே தனி தொழிற் சங்கங்களைக்கூட அமைத்துக்கொண்டிருக்கின்றனர். இப்போது இந்த தொழிலுக்கும் ஆபத்து வந்திருக்கிறது. 'எலெக்ட்ரானிக் ஸிட்டர்' என்கிற ஒரு சாதனம் இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பல வீடுகளில் உள்ள குழந்தைகளை ஒரு இடத்திலிருந்து பார்த்துக்கொள்வதை இது சாத்யமாக்குகிறதாம்.

...தந்து வரும் ...ிக்கட்டி ...றைகளினால் ...பத்து

...க ராடார் ஸ்தாபனம் உதவி

லண்டன், நவ 2—

...வில் மிதந்து வரும் பனிக்கட்டி...னால் ஏற்படும் ஆபத்துகளை...ர்க்க ராடார் சாதனம் மிகவும் ...யோகிக்கப்படுகிறது. ...ம்மாதிரி பனிக்கட்டிப் பாறை... எங்கெங்கு மிதக்கின்றன என்... அறிந்து முன் எச்சரிக்கை ...ய சர்வதேச "ஐஸ் பெட்ரோல்" ...ாபனம் இருந்து வருகிறது. ...ிக்கட்டிப் பாறைகளைக் கண்டு...பதுடன் மட்டுமின்றி அதை ...க்கவும், வழி என்ன என்று ...யப்பட்டு வருகிறது.

...ாய் தீர பண்ணை ...வலை

லண்டன், நவ, 2—

...தங்கள் நோய்களைத்தீர்க்க சுமார் ...0 நோயாளிகள் ஆஸ்பத்திகளை...ட்டு பிரிட்டனிலுள்ள "கெண்ட்" ...ஸெக்ஸ்" பண்ணையில் பிரதி தின...ம் வேலை செய்து வருகின்றனர்...ளாம்.

இவர்கள் 358 000 முட்டைகள், 1800 ...டன் உருளைக்கிழங்கு 100 டன் இறை...ச்சி அபரிமிதயனபழம் வகைராக்கள், ...ாய்கறிகள் இவைகளை உற்பத்தி ...செய்வதற்கு போதிய உதவி அளித்து...ள்ளனர்களாம்

ஜார்ஜ் மன்னரின் சொந்த செலவிற்கு பண உதவி அளிக்க வேண்டுமாம்

மெல்போர்ன், நவ. 2—

பிரிட்டிஷ் மன்னரான ஆறும் ஜார்ஜ் சொந்த செலவிற்கு ஆஸ்திரேலியர்கள் பண உதவி அளிக்க வேண்டுமென்று, மன்னருக்கு இப்பொழுது சொத்து இடையரதென்றும், "மேல் டோர்ன் ஆர்கஸ்" என்ற பத்திரிகை வற்புறுத்தியிருக்கின்றது.

தன் சொந்த செலவில் ஒரு வருஷத்தில் 20,000 பவுன் குறைந்துவிடுவதாக ஏற்கனவே பிரிட்டிஷ் மன்னர் அறிவித்துள்ளார். 1937-லிருந்து மன்னருக்கு அளிக்கப்படும் 410,000 பவுன் குறைக்கப்படவில்லை இதில் மன்னர் குடும்ப செலவிற்கும் இதர செலவிற்கும் 110,000 பவுன் கொடுத்து விடுகின்றாராம்.

சென்னை சர்க்கார் சிப்பந்திகளின் பயண அளவன்ஸ்

சென்னை, நவ 2—

சென்னை சர்க்கார் சிப்பந்திகள், சென்னை ராஜ்யத்தை விட்டு சர்க்கார் விஷயமாக வெளி ராஜ்யங்களிக்கு செல்ல நேரிட்டால் அங்கு அவர்களுக்கு இலவச உணவும், தங்க விடுதியும் அளிக்கப்படுகிறது.

இவர்களுக்கு சென்னை சர்க்கார் பயண அலவன்ஸ் சட்டத்தில் விதிகளின்ளதில் கால் பங்கு அலவன்ஸ் தான் பெறலாம் என்று நிர்ணயித்திருந்தனர்.

சென்னை கவர்னர் அங்கிகாரம் பெற்று சென்னை சர்க்கார் கீழ் கண்டுள்ள மாறுதல் ஏற்படுத்தியுள்ளனர்.

இந்தியாவிலுள்ள அந்நிய ராஜ்யங்களுக்கு செல்லும் சென்னை சர்க்கார் சிப்பந்திகள் தாங்கள் தங்கும் விடுதிகளுக்கு வாடகையோ, அல்லது உணவு, சிற்றுண்டி முதலியவைகளுக்கு பணம் கொடுக்கும்படி நேரிட்டால், அப்பொழுது அவர்கள் தினமும் இப்பொழுது அவர்கள் நிர்ணயித்துள்ள பயண அளவன்ஸில் அரை பங்கு பெறலாம்" என்று கூறியிருக்கின்றனர்.

சீர்திருத்த நாடகம்

சென்ற 29—10—51 திங்கள் இரவு 10-மணிக்கு அண்ணல் காந்தி அறிவியக்க நூல் நிலையத்தாரால் புலவர் க. முருகையா அவர்கள் தலைமையில் அறிஞர் அண்ணா தீட்டிய "வழக்கு வாபஸ்" நாடகமும் நடகப் புலவர் தோழர் மு. கருணாநிதி தீட்டிய நச்சுக் கோப்பை நாடகமும் நல்ல சிறப்பாக நடத்தப்பட்டது. ஏராளமான பொது மக்கள் வெளியூர் விருந்தும் உள்ளூரிலிருந்தும் வந்து சிறப்பித்தார்கள். வந்திருந்தவர்கள் அனைவரையும் வரவேற்று இந்த நாடகங்களின் நோக்கத்தையும் அவசியத்தையும் பற்றி நூல் நிலையத்தின் தலைவர் எ. பி தர்மலிங்கம் சொற்பொழிவாற்றினர். நாடக முடிவில் தலைவர் அவர்களால் ஒரு சொற்பொழிவு நிகழ்ந்தது. பொது மக்களுக்கு இந்த நாடகம் நல்ல கருத்தையும் தெளிவையும் அளித்துள்ளது. வந்திருந்தோர் அனைவரும் சுமார் இரண்டு மணிக்கு நாடகம் முடிந்து செல்லும்போது தங்கள் நல்ல கருத்தை ஒருவரோடொருவர் பறிமாறிக் கொண்டனர். நாடக இடையில் தோழர் கோவிலடி சிவகாளத்திலிங்கம் அவர்களால் நகைச் சுவைப் பகுதி நடத்திக் காண்பிக்கப்பட்டது. இரவு 2-30 மணிக்கு நிகழ்ச்சி முடிவுற்றது.

சென்னை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்

சென்னை, நவ. 2—

3—11—51 சனி மாலை 6 மணிக்கு செம்புதாஸ் தெரு 19 வது எண்ணுள்ள கரானா எஸ்டேட் மாளிகை 4 வது மாடி 31 வது அறையில் "பிரசண்ட விகடன்" ஆசிரியர் தோழர் நாரண துரைக்கண்ணன் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் ரஷ்யா சென்று திரும்பிய கலைஞர்கள் என். எஸ். கிருஷ்ணன் டி. ஏ. மதுரம், கே சுப்பிரமணியம் ஆகியோருக்கு வரவேற்பளிக்க 'வரவேற்புக் கமிட்டி' தேர்ந்தெடுக்கவேண்டியிருப்பதால் நகரிலுள்ள எல்லா எழுத்தாளர்களும் கலைஞர்களும் மாணவர் இயக்க, இளைஞர் கழக, கலைக்கழக பிரதிநிதிகளும் அவசியம் கலந்து கொள்ளும்படி செயலாளர் எழுதுகிறார்.

ஓர்லாண்டோ ரயில்வேயில் மாண்டவர்கள் ஞாபகார்த்தம்

ஜோஹென்னஸ்பாக நவ 2—

ஓர்லாண்டோ என்ற இடத்தில் 1949ல் நடை பெற்ற ரயில் விபத்தில் மாண்ட 50 பேர்-இந்தியர் சுதேசிகள் ஞாபகார்த்தமாக ஒரு கூட்டம் அந்த ஸ்தலத்தில் நடைபெற்றது.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2-45 Muthumari Chetty Street, Madras-1